த.சசிவதனி [1], ஏ.எம்.எம். முஸ்தபா [2]

# நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களும், தடைகளும்: அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்திய ஒரு ஆய்வு

1. சமூக விஞ்ஞானத்துறை, கலை கலாசார பீடம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. வா்த்தக முகாமைத்துவ பீடம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (மின்னஞ்சல்: amustafa@seu.ac.lk)

**ஆய்வுச் சுருக்கம்**

சம காலத்தில் சூழல் சுற்றுலா முக்கிய தொழிற்கூறாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்த அம்பாறை மாவட்டத்தின் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை யுத்தம் இரு தசாப்தங்களுக்கு பின்தள்ளி வைத்தது. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களையும், தடைகளையும் இனங்காணும் கண்ணோட்டத்தில் இந்த ஆய்வு விளங்குகின்றது.

இந்த ஆய்வில் அம்பாறை மாவட்டத்தில் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை இனங்காணல், தடைகளை அடையாளப்படுத்துதல், முன்னேற்றுவதற்கான விதந்துரைகளை முன்வைத்தல் என்பன முக்கிய நோக்கங்களாக வரையறுக்கப்பட்டன. முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி விபரண அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சூழல் சுற்றுலாவை அபிவிருத்தி செய்வதில் மூலதனப் பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தியின்மை, வங்கிச் சேவைகளின் விருத்தியின்மை, பன்முகப்படுத்தப்படாத அரச அபிவிருத்திச் செயற்பாடுகள், சிறந்த திட்டமிடலின்மை, அரச நிறுவனங்களின் குறைவான ஒத்துழைப்பு, பொது மக்கள் பங்களிப்பு குறைவாக இருத்தல் போன்றன தடைகளாக இனங்காணப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் அறுகம்பே சுற்றுலா அமைப்பின் பங்களிப்பினை அதிகரித்தல், சுற்றுலா முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வங்கிகள் கடனை விஸ்தரித்தல், ஒழுங்கமைந்த முகாமைத்துவம், நிலைத்திருக்கும் சூழல் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்தல், பொது மக்களின் பங்களிப்பினை அதிகரித்தல் மூலம் சூழல் சுற்றுலாவை ஊக்குவிக்க முடியும் என இந்த ஆய்வு விதந்துரை செய்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:-** *நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலா, சூழல் சுற்றுலா மையங்கள், பொதுமக்கள் பங்களிப்பு, சுற்றுலா முகாமைத்துவம்*

## ஆய்வின் அறிமுகம்

சமீப காலமாக பொருளாதார முக்கியத்துவம் பெற்றுவரும் சுற்றுலாத்துறை 2ம் உலக மகாயுத்தத்தை தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. 16ம் நூற்றாண்டின் நாடுகாண் பயணங்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கான மக்கள் அசைவுகள் ஏற்பட்ட போது அவை பொருளாதார துறையை மேம்படுத்துவதற்கான ஒரு அசைவாகவே இருந்தது. இப்பயணங்கள் புதிய நாடுகளை கண்டுபிடிப்பதற்கும் அரசியல் மேலாதிக்கம் மதப்பிரச்சாரம் போன்றவற்றிற்கும் காரணமாக அமைந்தன. இப்பயணங்கள் புலம் பெயர்வுகளாக கருதப்பட்டன. மனிதர்கள் கைத்தொழில் புரட்சியின் பின் ஏற்பட்ட செல்வப்பெருக்கின் அடிப்படையில் தமது ஓய்வு நேரங்களை பயனுள்ளவைகளாக ஆக்கிக் கொள்வதற்காக தொடங்கப்பட்ட பிரயாணங்களே சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந்தன. சுற்றுலா என்பது மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு ஓய்வினை கழிப்பதற்காக பொழுதுபோக்கிற்காக கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்காக மேற்கொள்கின்ற பயணமாகும். செல்லும் இடம், நோக்கங்கள், கால எல்லை, செலவுகள், மீளத்திரும்புதல் போன்ற பல விடயங்களை இது உள்ளடக்குகின்றது. சுற்றுலாக்கல்வி பற்றிய ஆய்வில் ஓய்வு (Leisure) பொழுதுபோக்கு (Recreation) சுற்றுலா (Tourism) ஆகிய 3 விடயங்கள் காணப்பட்டன. ஓய்வு என்பது மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். உற்பத்தி சேவைகளில் ஈடுபடுதல் நீண்டநேர உழைப்பு போன்றவற்றுடன் புறச்சூழலில் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் மனஅழுத்தங்கள் என்பன ஓய்வின் தேவையை ஏற்படுத்துகின்றன.

பிரித்தானியாவைச் சேர்ந்த சுற்றுலா நிறுவனம் (Institute Of Tourism) சுற்றுலா தொடர்பாக பின்வரும் கருத்தை வெளியிட்டது. சுற்றுலா என்பது மக்கள் தமது சொந்த வதிவிடம், தொழில் புரியும் இடத்திற்கு வெளியில் உள்ள இடம் ஒன்றிற்கு மேற்கொள்ளும் தற்காலிக அசைவு பற்றியதாகவும் அவ்விடங்களில் அவர்கள் தங்கி நிற்கும்போது மேற்கொள்ளும் செயற்பாடுகளையும் கொண்டதாகவும் இருக்கும். அதில் அனைத்து நோக்கங்களிற்தகான அசைவுகளையும் அதாவது பகல் பிரயாணமாகவே உல்லாசமானதாகவோ இருந்த போதும் அனைத்தையும் உள்ளடக்கும்.

சுற்றுலாத் தொழிலானது பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்குமான சாத்தியக் கூறை கொண்டுள்ள ஒரு துறையாக வளர்முக நாடுகள் மத்தியில் தற்போது அதிகமாக உணரப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இலங்கை சுற்றுலாத்துறை மூலமாக பெற்றுக் கொண்ட வருமானத்தை அட்டவணை 01 காட்டுகின்றது.

அட்டவணை 01

**சுற்றுலாத்துறை மூலமான வருமானம்**

| ஆண்டு | வருமானம்(ரூபா மில்லியனில்) |
|---|---|
| 1999 | 19288 |
| 2000 | 19024 |
| 2001 | 19034 |
| 2002 | 23724 |
| 2003 | 31209 |
| 2004 | 42059 |
| 2005 | 36377 |
| 2006 | 42586 |
| 2007 | 42571 |
| 2008 | 37094 |
| 2009 | 40133 |
| 2010 | 65018 |
| 2011 | 91926 |

மூலம்:மத்திய வங்கிய ஆண்டறிக்கை(2008)

உலகில் பெரியளவிலும் மற்றும் விரைவாகவும் வளர்ச்சியடைந்து செல்லும் கைத்தொழில்களில் ஒன்றான சுற்றுலாத்துறையின் ஒரு உபகூறாக சூழல் சுற்றுலா முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இயற்கைப் பாதுகாப்புச் சபையானது உலகப் பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து சூழலியல் சார் சுற்றுலா என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணத்தினை முன்வைத்தது. "இயற்கை பிரதேசங்களுக்கு பயணம் மேற்கொள்ளல் என்பதனை சூழலியல் ரீதியாக உரிமைப்படுத்துவதுடன், இயற்கையை மகிழ்வாக இரசிப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் உதவுவதோடு கடந்தகால, நிகழ்கால கலாசாரத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வழி வகுக்கின்றது. இச் சுற்றுலா உள்ளூர் மக்களுடைய சமூக, பொருளாதார ஈடுபாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அதிக பயனுடையதாகவும் இருக்கின்றது".

ஓர் உல்லாசப் பயண இலக்கு என்ற வகையில் இலங்கை அழகிய இயற்கையான கடற்கரைகள் முதல் பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் மரபுரிமையாகக் கொண்டுள்ளது. இவ்வளவு வளங்களும் ஒரு சிறு வெப்பவலயத் தீவுக்குள் நெருக்கமாகக் காணப்படுவது சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் கவர்ச்சியாக அமைகிறது. அந்தவகையில் இலங்கையின் சூழல் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இலக்கு மையங்களாக இலங்கையின் அங்கீகாரம் பெற்ற மரபுரிமைச் சின்னங்களாகக் பின்வருவன காணப்படுகின்றன.

01. கலாசார முக்கோண வலயம்
02. சிங்கராஜ வனம்
03. மத்திய மலைநாடு
04. நக்கிள்ஸ் தொடர்

இலங்கையில் 2009 இல் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர், முன்னைய வருடத்தோடு ஒப்பிடுகையில், 2010 ஆம் ஆண்டின் சுற்றுலாப்பயணிகளின் வருகை 50 சதவீதத்தால் அதிகரித்தது. சுற்றுலாத்துறை வருமானம் 70% வளர்ச்சியைக் (250 மில்லியன் அமெரிக்க டொலர்) காட்டியது. 2010இல், ஹோட்டல் மற்றும் பயண கொழும்பு பரிமாற்றுச் (CSE) சுட்டி அண்ணளவாக 200 சதவீதத்தால் அதிகரித்தது (பொருளியல் நோக்கு,2011). அவ்வாறிருக்க, அம்பாறை மாவட்டமானது நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான சிறந்த உள்ளார்ந்த வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த இலங்கையின் உள்நாட்டு யுத்தம், சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்த அம்பாறை மாவட்டத்தின் நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான அபிவிருத்தி வாய்ப்புக்களை இரு தசாப்தங்களுக்கு பின்தள்ளி வைத்தது.

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு**

Nandesene Ratnapala (1999) என்பவரினால் வெளிக்கொணரப்பட்ட "Tourism in Sri Lanka: The Social Impact எனும் ஆய்வானது நீர்கொழும்பு, பெந்தோட்டை, மவுண்ட்லாவன்யா, பேருவள மற்றும் ஹிக்கடுவை ஆகிய தென்மேற்குக் கரையோரத்தில் அமைந்துள்ள 05 பிரதேசங்களையும் மையமாகக் கொண்டு சுற்றுலாக் கைத்தொழிலினால் ஏற்பட்டுள்ள சமூக ரீதியான தாக்கங்களை மதிப்பிட்டு, அதனடிப்படையில் முழு இலங்கைக்குமான

தாக்கங்களை எதிர்வு கூறுவதற்கு முனைகின்றது. மேலும் இவ்வாய்வானது சுற்றுலாத்துறை மூலம் ஏற்படக்கூடிய பாலியல் துஷ்பிரயோகம், போதைவஸ்துப் பாவனைகளை ஆய்வு செய்வதோடு, அதனூடாக கலாசாரம் எதிர்நோக்கும் தாக்கங்களையும் தீர்வுகளையும் முன்வைக்க முற்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வை. பத்மானந்தகுமார் (2010) என்பவரினால் வெளியிடப்பட்ட "சூழல்சார் சுற்றுலாத்துறை" எனும் நூலானது சூழல் சுற்றுலா சம்பந்தமான சகல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. சூழல் சுற்றுலா தொடர்பான வரைவிலக்கணங்கள், அதனை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படை அம்சங்கள், அதனால் ஏற்படும் நன்மைகள் சூழல் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தாக்கங்கள் போன்றவை தொடர்பாக விரிவாகவும், விளக்கமாகவும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நோக்கப்பட்டுள்ளன. இதனை சிறந்த முறையில் வளர்ப்பதற்கான திட்டமிடல் பற்றியும் முகாமைத்துவம் பற்றியும் நோக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

TWMTW. Bandara (2011)என்பவரினால் வெளியிடப்பட்ட "Interpretive use of social and Environmental factors in the promotion of Eco- Tourism in Knuckles Area" என்ற ஆய்வுக் கட்டுரையில் நக்கிள்ஸ் பகுதியில் காணப்படும் சூழல் சுற்றுலா மையங்கள், அதனை பிரபல்யப்படுத்துவதில் எதிர்நோக்கும் தடைகள், அதனை எவ்வாறு அபிவிருத்தியடையச் செய்யலாம் பொன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

Edward Aves (2001) என்பவரால் எழுதப்பட்ட "Food Print Sri Lanka" எனும் நூலில் இலங்கையின் சுற்றுலா ஈர்ப்பு மையங்கள் பல உள்ளடக்கப்பட்டுள்ளன. அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் சூழல் சுற்றுலா மையங்களை அறுகம்குடா, லகுகல தேசிய பூங்கா, சேனநாயக்க சமுத்திரம் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மக்கள் வங்கியினால் வெளியிடப்பட்ட "சுற்றுலாத்துறை" (பொருளியல் நோக்கு மாசி/பங்குனி, 2011) எனும் ஆய்வுக் கட்டுரையானது இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பான சுற்றுலாத்தொழிலின் உலக மற்றும் பிராந்திய நிலைமை, சுற்றுலாத் தொழிலுக்கான மனிதவலு அபிவிருத்தியில் காணப்படும் சவால்களும், சிறுவர் நலன் பேணலும் சுற்றுலாத்துறையும், ஆரோக்கியச் சுற்றுலாவும் அதற்கான வாய்ப்புக்களும் மற்றும் இலங்கையின் சுற்றுலாத்தொழில் மீதான அதன் தாக்கங்கள், இலங்கையின் சுற்றுலாத் தொழிலில் உயிர்ப் பல்லினத்தன்மைப் பாதுகாப்பும் அதன் நீடித்திருக்கத்தக்க தன்மையும், நீடித்திருக்கத்தக்க கிராமிய அபிவிருத்தியில் மாற்று சுற்றுலாத் துறையின் வகிபாகம் போன்ற கட்டுரைகளின் வாயிலாக இலங்கையின் சுற்றுலாவைப் பற்றி புள்ளிவிபர ரீதியாக அலசியுள்ளன. அதேவேளை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு வினைத்திறனான அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்துள்ளன.

P.U. Ratnayake என்பவரது A collaborative approach between Tourism and Costrel communities: A present – Day need and opportunity for mangrove management and conservation in Sri Lanka என்ற ஆய்வில் சுற்றுலாத் துறையை எவ்வாறு வளர்க்கலாம் என்பதனையும் கண்டல் தாவரங்களைக் கொண்டு உயிர்ப் பல்வகைமையை கட்டியெழுப்புவதன் மூலம் சூழல் சார்ந்த சுற்றுலாத் துறையானது எவ்வாறு வளர்க்கப்படுகின்றது என்பதனையும் அதன் மூலம் வேலைவாய்ப்புக்களை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் கூறிப்பிட்டுள்ளார்.

Karin Fernando, Arunika Meedeniya போன்றோரது "Resent changes in tourism trends in Sri Lanka and implications for poverty reduction" என்ற ஆய்வானது சுற்றுலாத்துறையானது வறுமைக் குறைப்பில் எவ்வகையான பங்களிப்பினை வழங்குகின்றது எவ்வாறு சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யலாம் என்பதனையும் கூறிப்பிட்டள்ளனர். மேலும் Sadrudin A. Ahmed என்பவரது Perceptions of Tourism in Sri Lanka என்ற ஆய்வில் சுற்றுலாத் துறையின் மூலம் இலங்கை பெற்றுக் கொள்ளும் அனுகூலங்களையும் அதன் அடைந்து கொள்ளக் கூடிய நன்மைகளையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே இவ்வாய்வுகளை முன்மாதிரியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அம்பாரை மாவட்டம் சுற்றுலாத்துறையில் பாரிய அளவிலான சுற்றுலா சார் வளங்களைக் கொண்டிருந்தும் இது பற்றிய ஆய்வானது இதுவரையும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாய்வு இடைவெளியை நிரப்பும் முகமாக அவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

சுற்றுலாத்துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்த அம்பாறை மாவட்டத்தின் நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான அபிவிருத்தி வாய்ப்புக்களை கொண்டமைந்துள்ளது. அம்பாறை மாவட்டமானது கிழக்கு மாகாணத்தில் அமைந்து காணப்படுகின்றது. சுமார் 4431.4 சதுர கிலோமீற்றர் வரை பரந்து விரிந்துள்ள இப்பிரதேசமானது 20 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 507 கிராம சேவகர் பிரிவுகளையும், 828 சிறு கிராமங்களையும் கொண்டுள்ளது. 668,492 பேரை மொத்த சனத்தொகையாகக் கொண்ட இம்மாவட்டமானது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் பல்லின மக்களும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இப்பிரதேசமானது பல்வேறுபட்ட இயற்கை வளங்களை கொண்ட காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் பெரிதும் கவர்ந்திழுத்து வரும் ஒரு சூழல் சுற்றுலா மையமாக அம்பாரை மாவட்டம் திகழ்கின்றது. இது எண்ணற்ற பல கவர்ச்சிக் கூறுகளையும், கண்ணைக் கவரும் கடற்கரைகள், பசுமைத் தாவரங்கள், புராதன சிறப்பு மிக்க மலைகள், அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்கக்கூடிய பல்வேறுபட்ட கவர்ச்சி அம்சங்கள் போன்றவற்றையும் ஒருங்கே சேர்ந்த ஒரு அழகான பிரதேசமாகும். ஆனாலும் இம்மாவட்டத்தில் சூழல் சுற்றுலாவானது வளர்ச்சியடையாமல் காணப்படுகின்றது. ஏன் இவ்வாறு காணப்படுகின்றது என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வுக்குரிய பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

இவ்வாய்வு அம்பாறை மாவட்டத்தில் நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவை எவ்வாறு செயற்றிறனுள்ளதாக மாற்றியமைக்கலாம் என்பதனைப் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. துணை நோக்கங்களாக

1. நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை இனங்காணல்.
2. தடைகளை அடையாளப்படுத்துதல்.
3. மேலும் முன்னேற்றுவதற்கான விதந்துரைகளை முன்வைத்தல்

ஆகிய துணை நோக்கங்களினூடாக பிரதான இலக்கு அடையப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான முதனிலைத் தரவுகள் நேரடி அவதானம், வினாக் கொத்து, நேர் காணல் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. சுற்றுலா மையங்களுக்கு வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமும், பிரதேச பொது மக்கள், மதத்தலைவர்கள், அறுகம்பே சுற்றுலா அமைப்பின் (Arugam Bay Tourism Association - ABTA) பிரதிநிதிகள் போன்றோரிடம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. பிரதேச மக்களிடம் 100 வினாக்கொத்துக்கள் எழுமாற்றாக வழங்கப்பட்டு இவ்வாய்வுக்கு தேவையான முதன்னிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் சுற்றுலா தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், சுற்றுலா சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா அமைச்சுக்கள் மூலம் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான ஆவணங்கள், இணையத்தளங்கள் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகள் மூலமும் அப்பிரதேச அறுகம்பே சுற்றுலா அமைப்பின் அறிக்கைகள் மூலமும் பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் விவரண அடிப்படையிலும் எளிய புள்ளிவிபரவியல் முறை மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுப் பிரதேசமான அம்பாறை மாவட்டமானது கிழக்கு மாகாணத்தில் அமைந்து காணப்படுகின்றது. சுமார் 4431.4 சதுர கிலோமீற்றர் வரை பரந்து விரிந்துள்ள இப்பிரதேசமானது 20 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 507 கிராம சேவகர் பிரிவுகளையும், 828 சிறு கிராமங்களையும் கொண்டுள்ளது. 668,492 பேரை மொத்த சனத்தொகையாகக் கொண்ட இம்மாவட்டமானது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் பல்லின மக்களும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இப்பிரதேசமானது பல்வேறுபட்ட இயற்கை வளங்களை கொண்ட காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் பெரிதும் கவர்ந்திழுத்து வரும் ஒரு சூழல் சுற்றுலா மையமாக அம்பாரை மாவட்டம் திகழ்கின்றது.

அறுகம்குடா பிரதான மையமாகக் காணப்படுகின்றது. அறுகம்குடாவை மையமாகக் கொண்டு அமைந்துள்ள நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலா

மையங்களாக பாணமை கடற்கரை, சாஸ்திர வெளி (Peanut Farm), முதலைப் பாறை (Crocodile Park), கொட்டுக்கல் (Pottuvil Point), ஹெட ஓயா, கல் ஓயா, குமுக்கன் ஓயா, குமண பறவைகள் சரணாலயம், யால விலங்குப் புகலரண், புத்தங்கல சரணாலயம் போன்ற இடங்கள் நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை அம்பாறை மாவட்டத்தில் அதிகம் கொண்டுள்ளன.

## ஆய்வின் முக்கியத்துவம்

ஓய்வு மனிதர்களுக்கு உடல், உளம் சார்ந்த ஒரு அத்தியாவசிய தேவையாகும். சுற்றுலாப் பொருளாதாரத்தின் கண்ணோட்டத்தில் ஓய்வு குறுங்கால எல்லை கொண்டதாகவும், அண்மிய செல்லுமிடங்களை சார்ந்ததாகவும் மிகக் குறுகிய இலக்குகளை கொண்டதாகவும் இருக்கும் அந்தவகையில் பின்வரும் காரணங்களால் சூழல் சுற்றுலாத்துறையானது முக்கியத்துவம் பெறுகின்றது.

வருமானம் ஈட்டல், வேலைவாய்ப்பு, அந்நியச்செலாவணி சம்பாதிப்பு, இயற்கை வளங்கள் காட்சிகள் போன்றவற்றின் பாதுகாப்பு, சேவைகள் மற்றும் நிர்மாணத்துறைகளின் அதிகரிப்பு, சமூக உறவாடல் / இடைவினை, உட்கட்டுமான அபிவிருத்தி, இடம் தேசத்தை பற்றிய சர்வதேச அறிமுகம் போன்றவற்றை ஆய்வுப் பிரதேசத்திலும் முழு நாட்டிற்கும் ஏற்படுத்துவதன் மூலம் சுற்றுலாத்துறையானது முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இலங்கைப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறை மூலமாக பெற்றுக் கொண்ட வேலைவாய்ப்புக்களை அட்டவணை 02 காட்டுகின்றது.

**அட்டவணை 02**
**இலங்கையில் சுற்றுலாத் துறை மூலமான வேலைவாய்ப்பு (2000 -2008)**

| ஆண்டு | நேரடி வேலைவாய்ப்பு | மறைமுக வேலைவாய்ப்பு | மொத்த வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| 2000 | 379443 | 53120 | 91063 |
| 2001 | 33716 | 47194 | 80904 |
| 2002 | 36500 | 51100 | 87600 |
| 2003 | 50000 | 6500 | 115000 |
| 2004 | 53766 | 75272 | 129038 |
| 2005 | 52085 | 72919 | 125004 |
| 2006 | 55649 | 77909 | 133558 |
| 2007 | 60516 | 84723 | 145239 |
| 2008 | 51857 | 72599 | 124456 |
| 2009 | 52071 | 72899 | 124970 |
| 2010 | 55023 | 77032 | 132055 |
| 2011 | 57786 | 80899 | 138685 |

மூலம்:மத்திய வங்கி ஆண்டறிக்கை(2008)

## ஆய்வின் முடிவுகள்

அம்பாறை மாவட்டமானது கிழக்கு மாகாணத்தில் அமைந்து காணப்படுகின்றது. சுமார் 4431.4 சதுர கிலோமீற்றர் வரை பரந்து விரிந்துள்ள இப்பிரதேசமானது 20 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 507 கிராம சேவகர் பிரிவுகளையும், 828 சிறு கிராமங்களையும் கொண்டுள்ளது. 668,492 பேரை மொத்த சனத்தொகையாகக் கொண்ட இம்மாவட்டமானது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் பல்லின மக்களும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இப்பிரதேசமானது பல்வேறுபட்ட இயற்கை வளங்களை கொண்ட காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் பெரிதும் கவர்ந்திழுத்து வரும் ஒரு சூழல் சுற்றுலா மையமாக அம்பாரை மாவட்டம் திகழ்கின்றது. இது எண்ணற்ற பல கவர்ச்சிக் கூறுகளையும், கண்ணைக் கவரும் கடற்கரைகள், பசுமைத் தாவரங்கள், புராதன சிறப்பு மிக்க மலைகள், அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்கக்கூடிய பல்வேறுபட்ட கவர்ச்சி அம்சங்கள் போன்றவற்றையும் ஒருங்கே சேர்ந்த ஒரு அழகான பிரதேசமாகும். சூழல் சுற்றுலாவைப் பொறுத்த வரை முதன்மை பெறுவது கடற்கரையும் அதனோடு இணைந்த பிரதேசமுமாகும். இக்கடற்கரைகள் முழுவதும் பரந்தளவான சிறுகாடுகள், பவளப் பாறைகள் மற்றும் களப்பு என்பவை கண்ணைக் கவரும் விதத்தில் காட்சியளிக்கின்றன. இயற்கை சுற்றுலா ஈர்ப்பு மையங்களில் அடுத்து முக்கியம் பெறுவது இப்பிரதேசத்தின் உயிரினப் பல்லினத் தன்மையாகும். தேசிய பூங்காக்கள், பசுமைத் தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், ஊர்வன போன்ற உயிரினத் பல்லினத்தன்மையின் கூறுகள் இப்பிரதேசத்தின் சுற்றுலா ஈர்ப்பு மையங்களில் பிரதான இடத்தை வகிக்கின்றன. இக்கவர்ச்சி அடிப்படையில் அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை ஆராயலாம். சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறை தேசிய சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது. அறுகம்குடா சுற்றுலாப் பிரதேசம் சர்வதேச ரீதியாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதில் இன்று முன்னிலையில் திகழும் பிரதேசமாகும். இது இலங்கையில் அலையாடலுக்கு (surfing) சிறந்த ஒரு இடமாக அனைவராலும் கருதப்படுகின்றது. இதனால் இது சிறிய அவுஸ்ரேலியா என அழைக்கப்படுகின்றது. அறுகம்குடாவில் மேற்கொள்ளப்படும் கடலலைச் சறுக்கலானது உலகின் நான்காவது இடத்திலும், ஆசியாவில் இரண்டாவது இடத்திலும் காணப்படுகின்றது. இங்கு அலையாடலுக்கான காலம் ஏப்ரல் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையாகும். இக்காலத்தில் விடுதிகள் மற்றும்

ஹோட்டல்கள் என்பவை முழு நேரமும் இயங்கிக் கொண்டிருப்பதோடு, சுற்றுலாப் பயணிகளால் நிறைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். அறுகம்குடாவை மையமாகக் கொண்டு அமைந்துள்ள நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலா மையங்களாக பாணமை கடற்கரை, சாஸ்திர வெளி (Peanut Farm), முதலைப் பாறை (Crocodile Park), கொட்டுக்கல் (Pottuvil Point), ஹெட ஓயா, கல் ஓயா, குமுக்கன் ஓயா, குமண பறவைகள் சரணாலயம், யால விலங்குப் புகலரண், புத்தங்கல சரணாலயம் போன்ற இடங்கள் நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ளன.

சுற்றுச் சூழல் செயற்பாட்டுக் குழுவான சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு (Conservation International) எனும் அமைப்பின் "பூமாதேவியான" இந்த உலகிலுள்ள 25 உயிர்ப்பல்லினத்தன்மை தொடர்பான முனைப்பான மகிழ்வுணர்ச்சியையும் ஆர்வத்தையும் தூண்டுகின்ற இடங்களில் ஒன்றாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது (K.G.S.D Kunasinge,2011:27). அந்த வகையில் இலங்கையில் உயிர்ப்பல்லினத்தன்மை நிறைந்த இடங்களில் அம்பாரையில் கல்லோயா, அறுகம்பை, குமண, யால, புத்தல போன்ற 05 சூழல் சுற்றுலா மையங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு அம்பாரை மாவட்டமானது நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை கொண்டுள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அம்பாரை மாவட்டத்தின் நிலைத்து நிற்கும் சூழல்சார் சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை பல்வேறு காரணிகள் தடையாக அமைகின்றன. இப்பிரதேச நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலா விருத்திக்கு தடையாகவுள்ள காரணிகளில் மிகப் பிரதான தடையாகவுள்ள காரணிகளில் பிரதானமானது கலாசாரமாகும். சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியினால் சமூகச் சீர்கேடுகளும், கலாசார சீரழிவுகளும் இடம்பெற்று வருகின்றன. அம்பாரை மாவட்டமானது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு காணப்படுகின்றது. இறுக்கமான கலாசார அமைப்பையும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையையும் வலியுறுத்துகின்ற இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம்களிடத்தில் மேற்கத்திய சுற்றுலாப் பயணிகளின் ஆடை அமைப்புக்கள் வெறுப்பை ஏற்படுத்துகின்றன. நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவை அபிவிருத்தி செய்வதில் மூலதனப் பற்றாக்குறை 72%மான மூலதனப் பற்றாக்குறை அளவு காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் 54 விருந்தினர் இல்லங்களும், 350 விருந்தினர் அறைகளும் உண்டு. இவற்றில் பல அடிப்படை வசதிகளை மட்டும் வழங்கக் கூடியவை. எதிர்காலத்தில் மிகவும் தரமான சேவைகளை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு அத்தகைய வசதிகளை மேம்படுத்தவேண்டும். எனவே இவ்வாறான சேவைகளை விருத்தி செய்ய மூலதனம் பற்றாக்குறையாக காணப்படுகின்றது. இவை தவிர உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தியின்மை (65%), வங்கிச் சேவைகளின் விருத்தியின்மை, சூழல் மாசடைதல், பன்முகப்படுத்தப்படாத அரச அபிவிருத்திச் செயற்பாடுகள், சிறந்த திட்டமிடலின்மை, அரச நிறுவனங்களின் குறைந்த ஒத்துழைப்பு, பொதுமக்கள் பங்களிப்பு குறைவாக இருத்தல், சமூக அமைப்புக்களின் குறைந்தளவான செயற்பாடு என்பனவும் இப்பிரதேச நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவுக்குத் தடைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

அம்பாரை மாவட்டத்தில் சுற்றுலாத்துறையினை மேற்கொள்வதற்கான பல உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுவதோடு, அங்கு சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து வருகின்றமையை இவ்வாய்வு தெளிவுபடுத்துகின்றது. எனினும் அப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் தடைகளை நிவர்த்தி செய்து சுற்றுலாத்துறையை முன்னேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கமைய அரச, தனியார், பொதுமக்கள் பங்களிப்பினை அதிகரித்தல் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் அறுகம்பே சுற்றுலா அமைப்பின் (Aruham Bay Tourist Association – ABTA) பங்களிப்பினை அதிகரித்தல், சுற்றுலாத்துறை சார்ந்த முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அரச, தனியார் வங்கிகள் கடன் வசதிகளை விஸ்தரித்தல், ஒழுங்கமைந்த சுற்றுலா முகாமைத்துவம், நிலைத்திருக்கும் அபிவிருத்தியுடன் கூடிய வகையில் சூழல் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்தல் என்பன நிலைத்து நிற்கும் சூழல் சுற்றுலாவை வளர்ப்பதற்கான விதந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

அம்பாறை மாவட்ட சுற்றுலாத்துறை நன்கு திட்டமிடப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுமானால் குறைந்த பாதகமான தாக்கங்களுடன் பொருளாதார நலன்விளைவுகளை அதிகம் கொண்டதாக மாற்ற முடிவதுடன் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பிராந்திய, தேசிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் இத்துறை பங்களிப்புச் செய்யும். இத்துறையை வளர்த்தெடுக்க இலங்கை சுற்றுலா சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா அமைச்சு மற்றும் மக்கள், தனியார்/பொது

அமைப்புக்களின் ஈடுபாடு அவசியமானது என இவ்வாய்வ விதந்துரை செய்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


01. Ratnapala Nandasena, (1999), "Tourism in SriLanka: The social impact", Vishva Lekha, Ratmalana.
02. Guruge. G, (2009), "The Impact of International Tourism on Peripheral Regions: The Case of Sri Lanka", Research center for Social Sciences, University of Kelaniya, Sri Lanka.
03. ஜெயப்பிரபா.ஜெ, (2008), **"சூழலியல் சார் சுற்றுலா"**, யாழ்ப்பாணப் புவியியலாளன், புவியியற்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இதழ் 20, 88-95.
04. ஜயவிக்ரம.ஜே.எம்.ஏ, (ஜீன்-ஆகஸ்ட் 2000), **"சுற்றுலாக் கைத்தொழில்"**, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, மலர் 26, 2-29.
05. மனோஜ் குமார் அகர்வால், குணசிங்க. கே.ஜீ.எஸ்.டீ. (மாசி-பங்குனி, 2011), **"சுற்றுலாத்துறை"**, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, மலர் 36, 3-44.
06. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, (2006), **"பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு 2006-2016"**, 18-23.